கெருகம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் /செயல்அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை:-** திருமதி.ஜெகதீஸ்வரி சுந்தரேசன்.,DME

ந.க.எண்.121/2023-24

நாள். 21.02.2024

பொருள் : மனை உட்பிரிவு - அனுமதி குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - கெருகம்பாக்கம் ஊராட்சி ச.எண்கள்.506/2-ல் அடங்கிய 1781 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவு அனுமதி செய்து வரைபடம் ஒப்புதல் அளித்து உத்திரவு வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. திரு/திருமதி. B. Sukumar and 2 Others அவர்களின் விண்ணப்ப நாள்.19.02.2024
2. அரசாணை M.S.No 190, H & UD., Dept, நாள்- 02.09.2008.
3. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், கடித எண் ஆர்.டி.5039/2008-D நாள்-23.06.2009
4. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், கடித எண் ஆர்.டி.6398/2009 நாள்-23.06.2009.
5. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், கடித எண் ஆர்.டி.1563/2009 நாள்-05.02.2010.
6. மனுதாரர் திரு/திருமதி. . B. Sukumar and 2 Others சென்னை-600089.

*****

ஆணை :-

பார்வையில் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு சுற்றியுள்ள மனைகள் சாலைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்டு ஒதுக்கீட்டின் கீழ்கண்ட மனைப்பிரிவு மற்றும் மனை பிரிவு விதிகளுக்கு உட்படுத்தி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மு.மு.66/2016-2017ன் படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப் பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும். அதோடு தகுந்த சிறுபாலங்கள் சாக்கடை வடிகால், துப்பரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துதர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திலுள்ள இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
2. தெரு முனையில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரியங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாத கடை பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கில்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.

4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரதிற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவறோ கட்டக்கூடாது.

6. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்த வெளியில் கிணறு, மல அறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவைபோன்ற குடியிருப்பு அல்லாது அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

7. மனையின் பரப்பின் 50 சதவீதத்திற்கு மேல் கட்டிடம் கட்டக்கூடாது.

8. கடக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ, மனையிலிருந்து மண்தோண்டி எடுத்த பள்ளங்கள் ஏற்படுத்தக்கூடாது.

9. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் சட்டத்திட்டங்கள் விற்பனைப் பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

10. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தலைவர் / செயல் அலுவலர்
கெருகம்பாக்கம் ஊராட்சி
தலைவர் / செயல் அலுவலர்
கெருகம்பாக்கம் ஊராட்சி

21-2-24

**இணைப்பு**
மனை உட்பிரிவின் வரைபடம்

விடுநர்

ஆணையாளர்,
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
(இ) படப்பை.

பெறுநர்

ஊராட்சி மன்ற தலைவர்
கெருகம்பாக்கம் ஊராட்சி

ப.மு.எண்.551/2024/அ3 நாள் - .02.2024

அய்யா,

பொருள் மனைப்பிரிவு அனுமதி - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - கெருகம்பாக்கம் ஊராட்சி / கிராமம் - சர்வே எண் - 506/2- ல் அடங்கிய 1781 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவு அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ளது - அனுப்பி வைத்தல் - சார்ந்து.

பார்வை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் கடித எண் Layout-1/9271/2023, Date – 31.01.2024.

********

பார்வையில் காணும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் கடிதம் வாயிலாக, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கெருகம்பாக்கம் ஊராட்சி / கிராமம் சர்வே எண் 506/2 - ல் அடங்கிய 1781 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவு திரு.B.சுகுமார் மற்றும் 2 நபர்கள் பெயருக்கு ஒப்புதல் வழங்கி வரப்பெற்றுள்ளதால் இறுதி ஒப்புதல் வழங்க வேண்டி அசலாக வரைபடம் மற்றும் திட்ட அனுமதி இக்கடிதத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்படி மனுதாரரிடம், மனைப்பிரிவு அனுமதிக்கான வளர்ச்சி கட்டணங்களை வசூலிப்பதுடன், பார்வையில் கண்டுள்ள உறுப்பினர் செயலர், எழும்பூர், சென்னை 600 008 அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க உரிய ஆவணங்கள் அசலாக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

ஆணையாளர்
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
(இ) படப்பை.

இணைப்பு -

1) உறுப்பினர்-செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம்
சென்னை-600 008 கடித எண் Layout-1/9271/2023, Date – 31.01.2024.
2) திட்ட அனுமதி எண் - 15744, நாள். 31.01.2024 ( 2 நகல்)
PPD -LO -No 22/2024, Date – 31.01.2024
3) ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் 2 நகல்

நகல் -

Thiru.B.Sukumar and 2 Others
D.No 1/22, Plot No 29
Bethania Nagar Annex, Ramapuram
Chennai – 600 089

அனுப்புநர்
திருமதி.ஜெகதீஸ்வரி சுந்தரேசன்.,DME
தலைவர் / செயல் அலுவலர்
கெருகம்பாக்கம் ஊராட்சி

பெறுநர்:
Thiru. B. Sukumar and 2 Others
D.No- 1/22, Plot No- 29
Bethania Nagar Annex, Ramapuram
Chennai- 600089.

ந.க.எண். 121/2023-24

நாள். 19.02.2024

அய்யா :-

பொருள் :- மனைப்பிரிவு / உட்பிரிவு - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - கெருகம்பாக்கம் ஊராட்சி ச.எண்கள்.506/2-ல் அடங்கிய 1781 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவு அனுமதி கோரியது - கட்டணங்கள் செலுத்த கோருதல் - தொடர்பாக.

பார்வை :- 1.தங்கள் விண்ணப்பம் நாள்.19.02.2024
2.அரசாணை எண்.255/ஊ.வ.துறை நாள்.18.08.1997

பார்வை 1 ல் கண்ட தங்களின் வீடு/ கட்டிடம் கட்டும் வரைபட அனுமதி விண்ணப்பத்தின் பேரில் ஒப்புதல் வழங்க வேண்டி கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஊராட்சி கட்டணம்

கட்டிடம் மனை உட்பிரிவு

| | |
|---|---|
| 1 சதுர அடிக்கு ரூ.10/-வீதம் 14169X10 | 141690 |
| ஆய்வுக் கட்டணம் 8 X 500 | 4000 |
| மொத்தம் | 145690 |

மேற்குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் Village Panchayat Fund, Gerugambakkam என்ற முகவரிக்கு ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து தனித்தனி வங்கி வரைவுகளாக பெற்று இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை ஊராட்சியில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டியது.மேற்கூறிய கட்டணங்கள் செலுத்திய பின்னரே ஒப்புதல் வழங்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தலைவர் / செயல் அலுவலர்
கெருகம்பாக்கம் ஊராட்சி
தலைவர் / செயல் அலுவலர்
கெருகம்பாக்கம் ஊராட்சி

19.2.24